# ஆயர் மடல்.....

அன்புக்குரியவர்களே,

Happy Vacation!

கர்த்தர் உங்கள் பயணங்களில் உங்களோடுகூட பயணிக்கிறார் என்ற விசுவாசத்தோடு, பாதுகாப்பு உணர்வோடு இந்தியாவிற்கு சென்று வாருங்கள்.கர்த்தர் நமக்கு கொடுத்த புதிய நிர்வாக குழுவிற்காக கர்த்தரை ஸ்தோத்தரிப்போம். பழைய நிர்வாகிகளை கர்த்தர் ஆசீர்வதிப்பாராக. புதிய தரிசனம், ஒரு புதிய உற்சாகம் , ஒரு புதிய வேகம் புதிய கமிட்டியில் காணப்பட நாம் அனைவரும் ஊக்கமாக ஜெபிக்க வேண்டும். 2018 முதல் 2020 வரப்போகிற இரண்டு ஆண்டுகளுக்கு ஊழியம் செய்ய உங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக்குழுவில் கர்த்தருடைய சித்தம் வெளிப்பட திருச்சபை மக்களாகிய நீங்கள் தொடர்ந்து ஜெபிக்க வேண்டும். கர்த்தர் உங்கள் ஒவ்வொருவரையும் ஆசீர்வதிப்பாராக!

இப்படிக்கு,
உங்கள் ஆயர்,
Rev. Christopher Rajendran,
056 7105082
*csitcalain@gmail.com*

# *Meditation* (தியானம்)

அன்பிற்குரியவர்களே!,

"உன் தேவனாகிய கர்த்தரை நீ மறவாத படி எச்சரிக்கையாகயிரு"! (உபாகமம் 8:11).

நாம் குடும்பமாக பல ஆண்டுகளாக வாழ்ந்து வருகின்றீர்கள். என்றைக்காவது ஒரு நாள் நீங்கள் குடும்பமாக உட்கார்ந்து கடந்து வந்த பாதைகளில் கர்த்தர் உங்களுக்கு அனுமதித்த கஷ்டங்களையும், பாடுகளையும், சோதனைகளையும் தியானித்து, தியானித்து நல்ல பாடங்களை கற்றுக் கொண்டு கர்த்தரை மறவாதபடி எச்சரிக்கையாகயிருந்ததுண்டா**?** மோசே இஸ்ரவேல் மக்களோடு 40 ஆண்டுகள் வனாந்தரத்தில் பயணித்து தான் கர்த்தர் இடத்திற்கு போகும் நேரம் நெருங்கி விட்டது என்பதை உணர்ந்து, இஸ்ரவேல் மக்களை கூடி வரச் செய்து தியானிக்க அழைக்கிறார். கர்த்தர் உங்கள் ஒவ்வொரு வரையும், உங்கள் இருதயத்தில் உண்மையில் கர்த்தர் மீது அன்பும், ஆழமான நம்பிக்கையும், விசுவாசம் இருக்கிறதா என்று கண்டறியவும், வரும் நாட்களில் உங்கள் அனைவருக்கும் மிகவும் பிரையோஜனமாக ஆசீர்வாதமாக இருக்கவும் பல கஷ்டங்களை 40 ஆண்டுகளாக அனுமதித்தார். கர்த்தர் நாம் யார், நாம் எப்படி பட்டவர்கள் என்பதை நன்றாக

அறிந்திருக்கிறார். ஆனால் இந்த 40 ஆண்டுகளாக நாம் என்ன ஆவிக்குரிய பாடங்களை கற்றுக்கொண்டிருக் கிறோம்?. ஆதலால் இந்த 40 ஆண்டுகளாக நீங்கள் கடந்து வந்த பாதைகளில் கர்த்தர் என்னென்ன காரியங்களை செய்தார் என்பதை நினைத்து, நினைத்து கர்த்தரை மறவாத படி மிகவும் எச்சரிக்கையாகயிருங்கள். நீங்கள் கற்றுக் கொண்ட ஆவிக்குரிய பாடங்களை நிகழ்கால, எதிர்கால வாழ்கையின் பிரையோஜனத்திற்கென்று பயன் படுத்தி கர்த்தரை மறவாதபடி எச்சரிக்கையாகயிருங்கள் என்று கற்றுக்கொடுக்கிறார். நம்முடைய வாழ்விலும் மகிழ்ச் சியான பல நல்ல காரியங்கள், பல கஷ்டமான காரியங்களும், ஒரு சில துக்கமான காரியங்களும் நமது நினைவுகளை விட்டு நீங்குவதில்லை. நாமும் அச்சம்பவங்களை லேசாக மறப்பதில்லை. ஆனால் நாம் எவைகளை மறக்கக்கூடாது என்று வேதம் கற்றுக் கொடுக்கிறது? உபாகமம் 6:12, முதலில் நம்முடைய தேவனை நாம் மறக்கக்கூடாது. இரண்டாவது உபாகமம் 8:11ன் படி தேவனுடைய வார்த்தைகளை, கட்டளைகளை மறக்கக்கூடாது, மிகவும் எச்சரிக்கையாகயிருக்க வேண்டுமென்று நாம் வாசிக்கிறோம். மூன்றாவதாக உபாகமம் 8:2 ன் படி தேவன் நடத்தி வந்த எல்லா வழிகளையும் நினைப்பாயாக. நான்காவதாக உபாகமம் 8:16,17,18 ன் படி தேவன் எவ்வாறு அதிசயமாக, அற்புதமாக பாதுகாத்து, போஷித்தார் மேலும் சம்பாதிக்க

பெலனையும், ஞானத்தையும் கொடுத்ததை மறக்கக் கூடாது. இவ்வாறு தேவன் நமக்குச்செய்த எல்லா உதவிகளையும், உபகாரங்களையும் மறக்கக் கூடாது என்று சங்கீதம் 103 நம்மை எச்சரிக்கிறது.சங்கீதம் 9:17 ன் படி துன்மார்க்கரும், தேவனை மறக்கிற எல்லா ஜாதிகளும், நரகத்திலே தள்ளப்படுவார்கள். நாம் தேவனை மறந்து விடக்கூடாது என்று ஏன் வேதவசனங்கள் நம்மை எச்சரிக்கிறது? உன்னை உண்டாக்கின கர்த்தரை மறக் கிறதற்கு நீ யார்? தேவனுடைய பிள்ளைகளே இவை களை நினை! திரும்ப திரும்ப நினைத்துப் பார்க்க பழகிக் கொள், நீ தேவனால் மறக்கப் படுவதில்லை, காரணம் அவரே நம்மை உருவாக்கினவர்.

மேலும் நம்முடைய கடந்த காலங்களில் தொடர்ந்து வெற்றி, வெற்றியென்று நாம் பழக்கப்பட்டவர்களாக இருந்திருந்தால் நாம் பெருமையும், அகந்தையுள்ளவர் களாக, தேவனை மறக்கிற துன்மார்க்கர்களாக மாறிப் போயிருப்போம். ஆதலால் நாம் தோல்விகளைக்கண்டு பயப்படாமல் அவைகளிலிருந்து பாடங்களை கற்றுக் கொண்டு நம்முடைய கிறிஸ்தவ வாழ்க்கைப் பயணத்தில் முன்னேறிச்செல்வோமாக.

**ஆன்புடன்.**
**உங்கள் ஆயர்**
Rev. Christopher Rajendran.

# செயலரிடமிருந்து.......

**ஆ**ண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் திருச்சபையின் இறைமக்களாகிய அனைவருக்கும் என் அன்பின் வாழ்த்துக்கள்.

கடந்த மாதம் முழுவதும் கண்ணின் போல நம்மை காத்து வழி நடத்தி வந்த தேவனக்கு நாம் துதி ஸ்தோத்திரங்களை உள்ளத்தின் ஆழங்களிலிருந்து ஏறெடுப்போம். கடந்த மாதம் நடைபெற்ற திருச்சபையின் வருடாந்திர பொதுக்குழு கூடுகையினை தேவன் ஆசீர்வாதமாக நடத்தித் தந்தார். அந்நாளிலே வருகின்ற இரண்டு வருடத்திற்கான நல்ல ஒரு நிர்வாகக் குழுவினை திருச்சபையாக தேர்ந்தெடுக்க அருள் புரிந்த தேவனுக்கு துதி செலுத்துவோம். திருச்சபையின் அங்கத்தினராகிய நாம் ஒவ்வொருவரும் நிர்வாகக்குழு அங்கத்தினரோடு இணைந்து செயல் படுவோம். தேவன் நம்மையும் நம் திருச்சபையையும் ஆசீர்வாதத்தின் பாதையிலே வழி வடத்துவார்.

மேலும், கடந்த மாதம் 29 ம் தினத்தின் ஆராதனை சிறுவர் ஆராதனையாக நடை பெற்றது. முற்றுமாக நமது பிள்ளைகளால் நடத்தப்பட்ட அந்த ஆராதனை நம் அனைவருக்கும் மிகவும் ஆசீர்வாதமாகவும் சிறப்பாகவும் அமைந்தது என நம்புகிறேன். இந்த ஆராதனை சிறப்பாக அமைய உழைத்த ஒவ்வொருவருக்கும் குறிப்பாக Junior Church Teachers மற்றும் போதகர் அவர்கட்கும் நான் நன்றி கூறுகிறேன். மேலும் பங்கு பெற்ற பிள்ளைகள் உறு துணையாய் இருந்த பெற்றோர் அனைவருக்கும் திருச்சபையாக நன்றி கூறுவோம். ஏல்லாவற்றிற்கும் மேலாக இவ்விதமான ஆசீர்வாதங்களை நிறைவாக நமக்குத் தருகின்ற தேவாதி தேவனக்கு துதியும் ஸ்தோத்திரங்களும் மகிமையும் சதாகாலங்களிலும் உண்டாவதாக.

கடந்த இரண்டு வருடங்கள் நிர்வாக குழு உறுப்பினராக செயல் பட கிருபை புரிந்த தேவனை துதிக்கிறேன். உறுதுணையாய் இருந்த போதகர், உடன் நிர்வாக குழு உறுப்பினர் மற்றும் திருச்சபையின் அங்கத்தினர் ஒவ்வொருவருக்கும் என் உளமார்ந்த நன்றிகளைக் கூறிக்கொள்கிறேன்.

மேலும், தொடர்ந்து வரும் நாட்களின் எல்லா ஊழியங்களிம் இணைந்து செயல்படுவோம். தேவன் நம் ஒவ்வொருவருக்கும் அப்பேர்பட்ட வாய்பினை அருள்வாராக.

***M. நேசமணி.***

**********************

## <u>பெண்கள் ஐக்கியச் சங்கம்</u>

அன்புக்குரிய தாய்மார்களே !

விடுமுறை நாட்களில் நமது பிள்ளைகளை பல இடங்களுக்கு அழைத்துச் செல்ல இருக்கிறீர்கள். உங்களுடைய எல்லா பயணங்களில் கர்த்தர் உங்களோடு கூட பயணிக்கிறார் என்ற பாதுகாப்பு உணர்வோடும், ஜெபத்தோடும் பயணியுங்கள். இந்த விடு முறை நாட்களில் ஊருக்குச்செ ல்லாமல் இங்கேயே இருக்கும் தாய்மார்கள் பெண்கள் ஐக்கிய சங்க ஜெபக்கூட்டங் களுக்கு, ஊழியங்களில் உற்சாகமாக பங்குபெறுங்கள்.

*இப்படிக்கு,*
*உங்கள் ஆயரம்மா,*
**Angel.C.**

# Projects for July & August 2018

**Congregation**:

வேதபாட வகுப்பு (Bible study) ஒவ்வொரு புதன் மாலை 7.30 மணிக்கு ஆயர் இல்லத்தில் நடைபெறும். தயவு செய்து அனைவரும் கலந்து கொள்ளுங்கள்

*******************************************

## புதிய நிர்வாக குழுவை வாழ்த்துகிறோம்!

Chairman : Rev. M.Christopher Rajendran.

Vice Chairman : Mr.Kannan

Hon.Secretary : Mr.Suresh Rajan

Hon.Treasurer :Mr.Melbin Paul.

Hon.Warden : R.Paul Gnana Prabu

Hon.E.C.Member :Mrs.Jein Arputhakani Rajavel.

Hon.E.C.Member :Mr.Saman Rajkumar.

Hon.E.C.Member :Mrs.Biblin Christabel Nelson.

# எதிரியை மடங்கடிக்கும் எஸ்தர்

அனாதைக்கு அரசு வாழ்வு, அரண்மனை சுகம், பட்டத்தரசி அவள். ஆண்டவரையோ, ஆண்டவரின் ஜனத்தையோ, அறியாத கணவனுக்கு அவள் மனைவி (எஸ் 2:7:17). குடித்து வெறுத்து மனைவியை மற்றவர்கள் பார்த்து மகிழ வேண்டும் என்பதனை விரும்பும் அப்படிப்பட்ட கணவன் தான் விரும்பாதது நடக்கும் போது மூர்க்க வெறிக்கொள்பவன். பின்னர் கோபம் தணிந்தால் கஷ்டப்படுபவன். ராஜ ஸ்திரி என்றாலும் அழைக்காமல் அறைக்குள் நுளைந்தால் அடுத்த நிமிடமே கொலை செய்யப்படுவாள் என்ற கட்டளையை பிறப்பித்தவன். ஒரு மாதமளவும் அரண்மனையிலே இருந்தும் அலுவல் நிமித்தம் அல்லது ஆட்டம் பாட்டத்தில் மனதை பறி கொடுத்ததின் நிமித்தம் மனைவியின் முகத்தை கூடப்பார்க்காதவன்.

இங்கிதமாய் பேசி இப்படிப்பட்ட அதிகாரப் பெருமை வாய்ந்த அகங்கார கணவனை தன் வழியில் கொண்டு வத்து தன் ஜனத்தினை அழிவுக்குத் தப்புவித்தவள் தான் எஸ்தர். (எஸ் 5:8). தன் ஜீவனைப் பார்க்கிலும் தன் ஜனத்தின் அழிவைக் தாங்கிக் கொள்ள முடியாமற் போய் விட்ட அவளின் மனநிலை சட்டத்தினையும் மீற செய்து விட்டது.

பெருமை பேசுவோரை, துர்க்குணம் கொண்டோரை, துல்லியமாய் காட்டிக் கொடுத்து, தேவப் பெலத்தினால் அழித்துப் போட்ட அவள் தேவமனிதன் மொர்தகாயின் சொல் கேட்டபடியினால் தான் நடந்தது. ஆனால் எஸ்தர் தேவ ஜனத்திற்க்கு, தன் குலத்திற்க்கு வெளிச்சத்தையும், மகிழ்ச்சியையும், கழிப்பையும் கனத்தையும் கொண்டு வந்து விட்டாள் அவள். அழிவுக்கு ஏதுவான ஜனம் எஸ்தரின் அர்ப்பணத்தினால் ஆர்ப்பரித்து மகிழும் ஜனமாக மாற்றப்பட்டு விட்டது.

திருவசனத்திற்க்கு கீழ்படியாத கணவன்மாரை, பயபக்தியோடு கூடிய கற்புள்ள நடக்கையினால் போதனை யின்றி ஆதாயப்படுத்தக்கூடும், ஆசீர்வாதமாக மாற்ற முடியும் என்பதனை (1பேதுரு 3:1,2) வில் உள்ள வார்த்தையை

எஸ்தர் நிருபித்து விட்டாள். அவளைப் போன்றோர் ஆயிரமாயிரமாக ஏழும்பட்டும்.

- நெல்சன் சோபித ராஜ்.

# ***BEING A CHRISTIAN***

What is it like to be a Christian ?

It is like being a pumpkin that is carved into a jack-o-lantern.

God picks us from the pumpkin patch and brings us in from the field. The Bible says He selects us out of the world. We are in the world but no longer of the world. Jesus said *"As it is, you do not belong to the world, but I have chosen you out of the world.*" (John 15:19).

God washes all the "dirt" off the outside that we received from being around all the other pumpkins. All the outside influences of our former life must be cleaned up.

God carefully removes all the "yucky stuff" called "sin" from the inside. He then changes us

from the inside out by the Power of His Word. That's why it is important to meet with the church and learn God's Word.

He carves a new smiling face. Our countenance is changed by the power of His presence in our life. We then become so grateful. It can even show on our face!

Finally, God puts His light inside of us to shine for all the world to see.

***-Diniya Sunshine.***

# CHILDREN'S PLACE

## CHILDRENS' QUIZ FOR THE MONTH

THE GOSPEL ACCORDING TO John (Chapters 11 to 21)

**1.Who did the chief priests want to kill because by reason of him many of the Jews believed on Jesus?**

a. James
b. John
c. Lazarus
d. Philip

**2. What will the Holy Spirit do?**

a. Convict the world of sin, and of righteousness, and of judgment
b. Glorify Jesus
c. Guide you into truth
d. All of the above

**3. What is the greatest love a man can demonstrate?**

a. Donate Blood
b. Give all his goods
c. Lay down his life
d. None of the above.

**4. By what did Jesus say others would know who were his disciples?**

a. Their outward appearance
b. Their faithful in attending the temple
c. Their dedication to basic principles such as prayer
d. They would love one another

**5. What did Jesus say about the grain of wheat?**

a Except it fall in the ground and die it abides alone.
b. He who threshes in hope should be parker of his hope
c. The grain is falling

d. The wheat must be separated from the chaff

**6. Who said "My Lord, and my God?"**

a. John
b. The two on the way to Emmaus
c. Peter
d. None of the above

**7. Whose ear did Peter cut off?**

a. A scribe
b. A soldier
c. Barabas
d. Malcus

**8. What did Jesus pray just before going to the garden of Gethsemane?**

a. "Father , forgive them, for they do not know what they do"
b. " If it is your will, take this cup away from me: nevertheless not my will, but yours be done"
c. " Father, into your hands I commit My sprit"
d. " Father,…. that they be one, even as we are one"

**9. What did Jesus say we would do if we loved him?**

a. Keep His commandments ( 14:15)
b. Read His word
c. Pray
d. Witness

**10. What question did Jesus ask Peter three times after his resurrection?**

a. Do you love me more than these? ( 21: 15 – 17)
b. Now do you believe me?
c. Whom do you sat I am?
d. Will you go away also?

# June - Correct answers:

1. b) Two hundred pennyworth
2. a) When Jesus gave thanks
3. c) Jesus
4. d) All of the above
5. c) Lie
6. d) See and Blind
7. c) Who keeps God's words (8:51)
8. c) Who lays down his life for the sheep (10:11)
9. b) Judas (6:70)
10. b) On hearing death of Lazarus whom He loved(11:36)

## Chlidren Who wrote the correct answers.

1. *Easterine Benedicta Raj*
2. *Earline Bernice Raj*
3. *Roshan Ravindra*
4. *Joshika Vashni*
5. *Joshuva K.*
6. *Mervin Samuel Lawrance*
7. *Jemima Ashni*
8. *Jeremiah Alan*
9. *Jonathan Asher*
10. *Diniya Sunshine*
11. *Eric Jayden Jason*

12. Geovin George Rose

13. Gain George Rose

14. Annlin Sophia Nelson


15. Dennis Roger
16. Shelbino Paul

17. Angelin Sophia Nelson


18. Johan Sanjo

19. Jesvin Selvakumar

***Congrats !! you have done a wonderful job !!***



# The life of a Christian




The Church is our school

Heaven is our home


Jesus is our principal

The Holy Spirit is our teacher

Angels are our classmates

Bible is our textbook

Trials and temptations are our exams




Winning souls is our assignment

Prayer is our attendance

The crown of life is our degree

Praise and worship is our classwork

Tasting Gods love is our homework

The 10 commandments are our rules

We are all students of God

BE A WARRIOR NOT A WORRIER

Joshika Vashni.

# . MY GOD

**THERE ARE CERTAIN RULES TOLD BY GOD LONG AGO THEY ARE THE GOD'S TOP TEN**




**HOPE, IT'S NOT A WHIM OR A WISH IT'S A ROCK I AM STANDING ON. THAT ROCK IS CHRIST**

**- Joshua .K**

## *Place to show your talent*




## வேத வினா விடைப் போட்டி - ஜீலை - ஆகஸ்ட் 2018

(ஏசாயா 11 முதல் 30 வரை)

1. கர்த்தருடைய நாள் எப்படி வருகிறது?
2. அழுகிப்போன கிளை யார்?
3. யாருடைய சுவாசம் கெந்தகத் தீயைப்போல கொளுத்தும்?
4. தாவீது வாசம்பண்ணின நகரம் எது?
5. தகப்பன் வீட்டுக்கு மகிமையான சிங்காசனமாயிருப்பவன் யார்?
6. சந்திரன் கலங்கும், சூரியன் நாணமடையும் ஏன்?
7. மூன்று வயது கிடாரியைப்போல அலைகிறவர்கள் யார்?
8. கிளைகளில் நாலைந்து காய்கள் மீதியிருக்கும் மரம் எது?

9. விலையேறப்பெற்றக் கல் எங்கு வைக்கப்பட்டிருந்தது?

10. அரபியாவின் காடுகளில் இராத்தங்குபவர்கள் யார்?

குறிப்பு: விடைகளுக்குரிய அதிகாரமும் வசனமும் குறிப்பிட்டு இம்மாதம் 20 ம் தேதிக்கு முன் அனுப்பி வைக்கவும்.

## ஜூன் மாத விடைகள் :

1. உன். 6: 4
2. ஏசா. 7:2 0
3. ஏசா. 10: 5
4. ஏசா. 1: 26
5. ஏசா. 7:1 1- 14
6. ஏசா. 3:16
7. ஏசா. 8:3
8. ஏசா. 1:10-15
9. உன். 1:1
10. ஏசா. 6:1

## கடந்த மாதத்திற்கான விடைகள் எழுதியவர்கள்

1. திருமதி. ஜெயின் ராஜவேல்.
2. திருமதி. பிப்லின் நெல்சன்.
3. திருமதி. அனிதா ஜார்ஜ்.
4. திரு. ஜார்ஜ் ரோஸ்.
5. திருமதி. அகஸ்டா லாரன்ஸ்.
6. திருமதி. ஹெப்சிபாய் நேசமணி.
7. திருமதி. அனிதா சுரேஷ்.
8. திரு. ஜேசன் சாமுவேல்.
9. திருமதி. பெட்ரீஷியா ஜேசன்.
10. திருமதி. ஜோனிஷ் ஹெர்சில்.

11. திருமதி. ஜெயந்தா ஜாண்.

12. திருமதி. எபென் A. பிரசாத்.

13. திருமதி. ராதிகா செல்வகுமார்.

*****************************************

## WEDDING ANNIVERSARY –July 2018

| Date | Name | Contact |
|---|---|---|
| 4-Jul | Mr.A.S. Kannan<br>Mrs.Lavanya Kannan | 050 44821006 |
| 5-Jul | Mr.Saman rajkumar<br>Mrs.Ceciliya Rajkumar | 050 322 7592 |
| 8-Jul | Mr.George Rose<br>Mrs.Anita George | 050 290 0809 |
| 12-Jul | Mr.David Liningston<br>Mrs.Beulah Rani Livingston | 050 543 2630 |

## WEDDING ANNIVERSARY –August 2018

| Date | Name | Contact |
|---|---|---|
| 18- Aug | Mr.Derick Gasbath Joy<br>Mrs. Sheeba derick | 05 667 7528 |
| 23- Aug | Mr.Jason Samuel<br>Mrs.Patricia Santhi | 056 257 8373 |
| 26-Aug | Mr.A.Yobu<br>Mrs.Anna Jothi | 050 838 6851 |

## *தேவனாகிய இயேசு எங்கெல்லாம் வாசம் செய்கிறார் ?*

1. தேவனுடைய நாமத்தை பிரஸ்தாபப்படுத்தும் இடத்தில். - யாத் 22:24

2. இரண்டு பேராவது மூன்று பேராவது இயேசுவின் நாமத்தில் கூடகிற இடத்தில் - மத் 18 : 19

3. முழு இருதயத்தோடு தேடுகிற இடத்தில் - எரே 29: 13

4. மேவனுடைய சத்தத்தை கேட்கிறவர்களிடத்தில் - வெளி -3 : 20

5. தேவனுக்காக வாசலை திறந்து வைத்திருக்கிற இடத்தில் - வெளி 3:20

6. ஒருமனப்பட்டு ஜெபத்திலும் வேண்டுதலிலும் தரித்திருக்கிற இடத்தில் - அப் 1: 14

7. தேவனுடைய வசனத்தை கருத்தாய் உட்கொள்ளுகிறவர் களிடத்தில் - அப் 10: 44

8. தேவனைத் துதித்துப் பாடுகிற இடத்தில் - அப் 16 : 25,26

9. தேவனை விசுவாசிக்கிற இடத்தில் - அப் 16:31

10. தேவனை சொந்த இரட்சகராக ஏற்றக்கொண்ட இடத்தில் - யோவான் 1:12

11. தேவனுடைய கடிந்து கொள்ளுதலுக்கு திரும்புகிறவர் களிடத்தில் - நீதி 1:23

12. அதிகாலையில் தேவனைத் தேடுகிறவாகளிடத்தில் - நீதி – 8:1

13. கர்த்தரை நம்புகிறவர்களிடத்தில் - நீதி – 28:25, 29:25

14. சாந்தகுணமள்ளவர்கள் இரக்கிற இடத்தில் - சங் 147:6

15. கர்த்தருக்கு பயந்தவர்களிடத்தில் - சங் 147:11

16. கர்த்தருடைய கிருபைக்கு காத்திருக்கிறவர்களிடத்தில்
- சங் 147:11, ஏசா 40:31

17. உண்மையாக கர்த்தரை நோக்கி கூப்பிடுகிற இடத்தில்
- சங் 145:18

18. கர்த்தரிடத்தில் அன்பு கூருகிறவர்களிடத்தில்- சங் 145:20

19. மனம் திரும்புகிற இடத்தில் - மத் 4:17

20. தேவனுடையக் கதவைத் தட்டுகிறவர்களிடத்தில்- மத் 7:7

21. தேவனுடைய ராஜ்ஜியத்தையும் அவருடைய நீதியையும்
- தேடுகிற இடத்தில் -மத் 6:33

22. இயேசுவின் நாமத்தினாலேகேட்கிறவர்களிடத்தில்
- யோவான் 14:14

23. தாழ்மையான இடத்தில் - ஏசாயா - 44:3, 55:1

24. இருதயத்தில் சுத்தமுள்ளவாகளிடத்தில் - மத் - 5 : 8

25. இரவும் பகலும் உபவாசித்து ஜெபம் பண்ணிக்கொண்
டிருக்கிற இடத்தில் - லூக் 2:37,38

26. பிதாவின் சித்தம் செய்கிற இடத்தில் - மத் 7:21

27. தேவனை அழைக்கிற இடத்தில் - யோவான் 2:1

28. தேவனுடைய வார்த்தைகள் இருக்கிற இடத்தில்
- யோவான் 15 :7

29. தேவனை கனம் பண்ணுகிறவர்கள் இடத்தில்
- 1சாமு 2:30

30 .கர்த்தரடைய மாமிசத்தையும் இரத்தத்தையும் பானம்
பண்ணுகிறவர்களிடத்தில் - யோவான் 6:56.

- ***M.Nesamony***

# BIRTHDAY CELEBERANTS - July 2018

| S.No | Date | Name | Contact |
|---|---|---|---|
| 1 | 1-Jul | Mr.A.Ravichandran | 056 641 1363 |
| 2 | 5-Jul | Mr.P.David Raj | 050 832 8013 |
| 3 | 5-Jul | Mrs.Jessy Beula John Joseph | 056 763 6127 |
| 4 | 5-Jul | Master.Joshuva K. | 050 924 9930 |
| 5 | 7-Jul | Mrs.Hepsi Bai Nesamony | 050 523 7237 |
| 6 | 10-Jul | Master.Eric Jayden | 056 257 8373 |
| 7 | 13-Jul | Mr.Bhaskar Rajaram | 055 825 6072 |
| 8 | 14-Jul | Mr.Jason Samuel | 056 257 8373 |
| 9 | 14-Jul | Mrs.Bavani Selvakumar | 050 838 6851 |
| 10 | 19-Jul | Mrs.Sangeetha Ujin Raj | 056  272 5446 |
| 11 | 23-Jul | Mr.Ravindra | 056 885 2900 |
| 12 | 25-Jul | Mrs.Angelin Nalini Bhasker | 055 825 6072 |
| 13 | 26-Jul | Mrs.Roselin Tamil Selvi Balaji | 052 9723142 |
| 14 | 28-Jul | Mr.David Sornabalan | 055 640 0635 |
| 15 | 29-Jul | Master.Dennis Roger | 050 4491769 |
| 16 | 29-Jul | Master.Mervin samuel | 056 641 1676 |
| 17 | 29-Jul | Baby. Jania Preni Belfer John | 055 730 9275 |

# BIRTHDAY CELEBERANTS - August 2018

| Date | Name | Contact |
|---|---|---|
| 2-Aug | Mrs.Blessy Grace Jonish | 050 324 5774 |
| 3-Aug | Mr.R.Rajavel | 050 4491769 |
| 12-Aug | Mr.Jeremiah Kingston | 050 6848174 |
| 14-Aug | Master.Jeremiah Alan | 050 586 8173 |
| 15-Aug | Mr.Y.Mesiah Das | 050 543 1241 |
| 16-Aug | Mr.Derin Joy | 055 553 5200 |
| 20-Aug | Master.Aldan Derick | 050 667 7528 |
| 28-Aug | Mrs.Augusta Lawrance | 056 641 1676 |
| 30-Aug | Mrs.Padma Alexis Joy | 050 221 8016 |
| 31-Aug | Mrs.Anitha Rajan | 050 586 8173 |

Wishing you a birthday
filled with God's blessings,
Thanking God for the gift
of your faith-filled life, and
Praying that the Holy Spirit
will strengthen you
as you serve the Church.

Have a Blessed Birthday

# DAILY BIBLE READING July – 2018

"உமது வேதத்தில் நான் எவ்வளவு பிரியமாயிருக்கிறேன்!
நாள் முழுதும் அது என் தியானம்"

| Date | Day | Morning | Evening |
|---|---|---|---|
| 1 | SUN | Psalm 126- 128 | Joshua 3 |
| 2 | MON | Psalm 129 -131 | Joshua 4 |
| 3 | TUE | Psalm 132- 134 | Joshua 5 : 1 - 6:5 |
| 4 | WED | Psalm 135 - 136 | Joshua 6 : 6 - 27 |
| 5 | THU | Psalm 137 - 138 | Joshua 7 |
| 6 | FRI | Psalm 139 | Joshua 8 |
| 7 | SAT | Psalm 140 - 141 | Joshua 9 |
| 8 | SUN | Psalm 142 - 143 | Joshua 10 |
| 9 | MON | Psalm 144 | Joshua 11 |
| 10 | TUE | Psalm 145 | Joshua 12 -13 |
| 11 | WED | Psalm 146 - 147 | Joshua 14 - 15 |
| 12 | THU | Psalm 148 | Joshua 16 - 17 |
| 13 | FRI | Psalm 149 - 150 | Joshua 18 - 19 |
| 14 | SAT | Acts 1 | Joshua 20 - 21 |
| 15 | SUN | Acts 2 | Joshua 22 |
| 16 | MON | Acts 3 | Joshua 23 |
| 17 | TUE | Acts 4 | Joshua 24 |
| 18 | WED | Acts 5 | Judges 1 |
| 19 | THU | Acts 6 | Judges 2 |
| 20 | FRI | Acts 7 | Judges 3 |
| 21 | SAT | Acts 8 | Judges 4 |
| 22 | SUN | Acts 9 | Judges 5 |
| 23 | MON | Acts 10 | Judges 6 |
| 24 | TUE | Acts 11 | Judges 7 |
| 25 | WED | Acts 12 | Judges 8 |
| 26 | THU | Acts 13 | Judges 9 |
| 27 | FRI | Acts 14 | Judges 10 |
| 28 | SAT | Acts 15 | Judges 11 |
| 29 | SUN | Acts 16 | Judges 12 |
| 30 | MON | Acts 17 | Judges 13 |
| 31 | TUE | Acts 18 | Judges 14 |

# DAILY BIBLE READING August – 2018

“உமது வேதத்தில் நான் எவ்வளவு பிரியமாயிருக்கிறேன்!
நாள் முழுதும் அது என் தியானம்”

| Date | Day | Morning | Evening |
|---|---|---|---|
| 1 | WED | Acts 19 | Judges 15 |
| 2 | THU | Acts 20 | Judges 16 |
| 3 | FRI | Acts 21 | Judges 17 |
| 4 | SAT | Acts 22 | Judges 18 |
| 5 | SUN | Acts 23 | Judges 19 |
| 6 | MON | Acts 24 | Judges 20 |
| 7 | TUE | Acts 25 | Judges 21 |
| 8 | WED | Acts 26 | Ruth 1 |
| 9 | THU | Acts 27 | Ruth 2 |
| 10 | FRI | Acts 28 | Ruth 3 - 4 |
| 11 | SAT | Romans 1 | 1 Samuel 1 |
| 12 | SUN | Romans 2 | 1 Samuel 2 |
| 13 | MON | Romans 3 | 1 Samuel 3 |
| 14 | TUE | Romans 4 | 1 Samuel 4 |
| 15 | WED | Romans 5 | 1 Samuel 5 - 6 |
| 16 | THU | Romans 6 | 1 Samuel 7 - 8 |
| 17 | FRI | Romans 7 | 1 Samuel 9 |
| 18 | SAT | Romans 8 | 1 Samuel 10 |
| 19 | SUN | Romans 9 | 1 Samuel 11 |
| 20 | MON | Romans 10 | 1 Samuel 12 |
| 21 | TUE | Romans 11 | 1 Samuel 13 |
| 22 | WED | Romans 12 | 1 Samuel 14 |
| 23 | THU | Romans 13 | 1 Samuel 15 |
| 24 | FRI | Romans 14 | 1 Samuel 16 |
| 25 | SAT | Romans 15 | 1 Samuel 17 |
| 26 | SUN | Romans 16 | 1 Samuel 18 |
| 27 | MON | 1 Corinthians 1 | 1 Samuel 19 |
| 28 | TUE | 1 Corinthians 2 | 1 Samuel 20 |
| 29 | WED | 1 Corinthians 3 | 1Samuel 21 - 22 |
| 30 | THU | 1 Corinthians 4 | 1 Samuel 23 |
| 31 | FRI | 1 Corinthians 5 | 1 Samuel 24 |

# Worship Timings

## Main Worship Hall – Oasis Hospital Campus, Al Ain.

| | | |
|---|---|---|
| First and Third Fridays | 7:00 PM | Communion Service |
| Second & Fourth Fridays | 7:00 PM | Regular Service |
| First and Third Fridays | 6.30 PM | Men's Prayer |
| Second & Fourth Fridays | 6.30 PM | Bible Study |
| Every Friday | 6.15 PM | Junior Church |

## REGULAR MINISTRIES @ PERSONAGE – Jahli

| | | |
|---|---|---|
| First Friday | 11:00 AM | Fasting Prayer |
| Second & Fourth Saturdays | 07.00 PM | Gospel Ministry |
| Third Saturday | 07.30 PM | Women's Prayer |
| Last day of Every Month | 11.30 PM | Month End & Beginning Prayer |